தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள் – 04.11.2020**

**முன்னிலை**

**திரு. சு.முத்துராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 10667/D/2019**

திருமதி. வனஜா முனியன் --- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / செயல் அலுவலர், புவனகிரி பேரூராட்சி, கடலூர் மாவட்டம். --- பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன்கீழ் மனு செய்த நாள் | 22.09.2018 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 23.10.2018 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 23.10.2018 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 21.10.2019 |

****

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் நேரடியாக விசாரணை செய்ய இயலாததால், இன்று (04.11.2020) தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மனுதாரரின் மனுவில் தொலைபேசி / அலைபேசி எண் குறிப்பிடப்படாததால் இன்றைய விசாரணையில் அவரை தொடர்பு கொள்ள இயலவில்லை. பொதுத் தகவல் அலுவலர் திரு.ஜேம்ஸ் D. சாமி, செயல் அலுவலர், புவனகிரி பேரூராட்சி, கடலூர் மாவட்டம் இன்றைய தொலைபேசி விசாரணையில் பங்கேற்றார்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் புவனகிரி பேரூராட்சி அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், ந.க.எண்.456/2016-ல் குடிநீர் இணைப்பு கோரும் வீட்டிற்கு சொத்துவரி விதிப்பு செலுத்தப்படாத நிலையில் குடிநீர் இணைப்பு வழங்க இயலாது என்பதற்கான நீதிமன்ற ஆணை மற்றும் வேறு ஏதேனும் உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருப்னின் அவற்றின் நகல், குடிநீர் இணைப்பு வழங்குவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரம், பேரூராட்சியில் பூங்கா இடத்தினை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட கட்டிடம் தொடர்பாக தீர்ப்பாணை

பிறப்பிக்கப்பட்டிருப்பின் அவற்றின் நகல், ந.க.எண்.639/16-ன் துப்புரவு மேற்பார்வையாளர் இடத்தை பார்வையிட்டு வாய்மொழியாக கூறியதை பதிவு செய்த விவரம், துப்புரவு பணியாளர்களின் முழு விவரம், பேரூராட்சியில் பூங்கா இடத்தினை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட கட்டிடம் தொடர்பாக தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டிருப்பின் அவற்றின் நகல், புவனகிரி பேரூராட்சிக்கு சொந்தமான இடங்களை ஆக்கிரமிப்பு செய்தது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரம் உள்ளிட்ட முழு விவரங்களை மொத்தம் 13 இனங்களில் ஆவண நகல்கள் மற்றும் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1) மற்றும் 19(3)-ன் கீழான தனது முதல் மற்றும் இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (04.11.2020) தொலைபேசி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் பங்கேற்ற பொதுத் தகவல் அலுவலர், மனுதாரருக்கு ஏற்கனவே தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். மேலும், மனுதாரரின் இதே பொருள் உடைய வழக்கு ஏற்கெனவே விசாரணை மேற்கொள்ளப்பட்டு, அதன் அடிப்படையில் தகவல்கள் வழங்கப்பட்டதாகவும் தெரிவித்தார். மனுதாரரின் மனுவில் தொலைபேசி / அலைபேசி எண் குறிப்பிடப்படாததால் இன்றைய விசாரணையில் அவரை தொடர்பு கொள்ள இயலவில்லை.

5. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையின் முடிவில், மனுதாரரை தொடர்பு கொள்ள இயலாத நிலையில், மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனுவிற்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதா என்பதை ஆய்வு செய்து, இம்மனுவிற்கு உரிய தகவல்களை வழங்க கடலூர் மாவட்டம் புவனகிரி பேரூராட்சி அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இம்மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முடித்துக் கொள்கிறது. மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1) மனு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**ஒம்/- (சு. முத்துராஜ்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண். SA 10667/D/2019**

பெறுநர்

**பொது அதிகார அமைப்பு:-**

பொதுத் தகவல் அலுவலர் / செயல் அலுவலர்,
புவனகிரி பேரூராட்சி, கடலூர் மாவட்டம். (இ) 6(1) மனு

**மனுதாரர்:-**

திருமதி. வனஜா முனியன்,
எண்.5, தில்லை நகர்,
புவனகிரி & தாலுக்கா,
கடலூர் மாவட்டம் - 608 601.

Copy to: File
SNPA 06.11.2020